செய்தி வெளியீடு எண். 140 நாள். 13.03.2018

**தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் 16.03.2018 அன்று நடைபெறவுள்ளது - மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

மெட்ராஸ் செக்யூரிட்டி சர்வீஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தால் Supervisor and Security Guard ஆகிய பணியிடங்கள் திருவள்ளூர் மாவட்டம் மற்றும் ஸ்ரீபெரும்புதூர் பகுதியில் உள்ள தனியார் நிறுவனங்களில் ஆண் பணியாளர்கள் தேவையாக இருப்பதால் அப்பணியிடங்களுக்கு வேலை நாடுநர்களை தேர்வு செய்யப்பட உள்ளது. இப்பணிக்கு கல்வித் தகுதியாக SSLC Pass / Fail எனவும், உடற் தகுதியாக 5½ அடி உயரமும், 55 கிலோ எடையும் இருத்தல் வேண்டும் எனவும் வயது வரம்பு 25 முதல் 40 வயது வரை உள்ளவர்கள் எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளதால் மேற்கூரிய தகுதி உள்ளவர்கள் நேர்காணலில் கலந்துகொள்ளலாம் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. ஆண்கள் மட்டுமே கலந்துகொள்ள வேண்டும். இப்பணிக்கு மாதச் சம்பளம் ரூ.10,000/- முதல் வழங்கப்படும் எனவும் PF பிடித்தம், உணவு மற்றும் தங்குமிடம் வசதி செய்து தரப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்காணும் தகுதியும் விருப்பமும் உடையவர்கள், 16.03.2018 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், திருவள்ளூரில் நடைபெறும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இத்தனியார் வேலைவாய்ப்பு முகாமில் பணிநியமனம் பெறுபவர்களின் வேலைவாய்ப்பு அலுவலக பதிவு ரத்து செய்யப்படமாட்டாது எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவிக்கிறார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**